தினமணி

வறண்டுபோன விளைநிலங்கள்

First Published : 06 Aug 2012 03:18:58 AM IST



காரைக்கால் பச்சூர் கிராமத்தில் வறண்டு காணப்படும் விளைநிலம்.

காரைக்கால், ஆக. 5: காவிரியில் தண்ணீர் வரத்தின்மையால் காரைக்காலை வறட்சி மாவட்டமாக புதுவை அரசு அறிவித்து, விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

சம்பா, தாளடி பயிர் செய்ய இருந்த விவசாயிகள், காவிரியில் தண்ணீர் வரத்து பொய்த்துவிட்டதால் செய்வதறியாது உள்ளனர்.

இது குறித்து முன்னாள் வேளாண் அமைச்சரும், புதுவை மாநில காங்கிரஸ் செயலருமான கமலக்கண்ணன் கூறியது:

தானே புயலுக்குப் பிறகு காரைக்காலில் விவசாயம் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு முன்னேற்றம் இல்லை. காவிரி தண்ணீர் நிகழாண்டு குறித்த காலத்தில் வராமல் போயிற்று.

காரைக்காலில் கடந்த 2005-ம் ஆண்டு ஏரிகள் வெட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால், அரசு இதுவரை ஏரிகள் வெட்ட முன்வரவில்லை.

மத்திய அரசும், திட்டக் குழுவும் நிலத்தடி நீரை தேக்கி வைக்க மாநில அரசுக்கு நிதியுதவி செய்ய தயாராக இருக்கிறது.

புதுவையை பொருத்தவரை ரூ. 100 கோடி கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. இதைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்க மாநில அரசு முன்வரவில்லை.

எங்குப் பார்த்தாலும் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. காவிரி நீர் தற்போது வரத்தின்மையால் கால்நடைகளுக்கு வைக்கோல்கூட கிடைக்காத நிலை ஏற்பட்டுவிட்டது.


எனவே, காரைக்காலை வறட்சி மாவட்டமாக அறிவித்து, விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் நிவாரணம், கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்க புதுவை அரசு முன்வர வேண்டும்.

சம்பாவுக்கு பிந்தைய விவசாயத்துக்காவது தேவையான விதை, உரம் உள்ளிட்டவற்றை வேளாண் துறை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றார்.

## தள்ளிப் போகிறது சம்பா பயிர் சாகுபடி!

வி.என். ராகவன்

First Published : 06 Aug 2012 01:58:38 AM IST



மேட்டூர் அணை நீர்மட்டம் குறைவாக இருப்பதால், தஞ்சை அருகே புறவழிச்சாலைப் பகுதியில் தரிசாக போடப்பட்டுள்ள நிலம்.

தஞ்சாவூர், ஆக. 5: மேட்டூர் அணையில் தண்ணீர் வராதது, பருவ மழை தவறியது போன்ற காரணங்களால் டெல்டா மாவட்டங்களில் நிகழாண்டு சம்பா பயிர் சாகுபடி தள்ளிப் போகிறது.

மேட்டூர் அணை நீர் மட்டம் போதிய அளவுக்கு இல்லாததால் டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடியை பெரும்பாலான விவசாயிகள் கைவிட்டனர். நிலத்தடி நீர் ஆதாரமும், மோட்டார் பம்ப்செட் வசதியும் உள்ள விவசாயிகள் மட்டுமே குறுவை சாகுபடி மேற்கொள்கின்றனர்.

டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடியின் இயல்பான பரப்பளவான சுமார் 1.20 லட்சம் ஹெக்டேருக்கு பதிலாக, இப்போது தஞ்சாவூர் மாவட்டத்தில் 17,000 ஹெக்டேரும், திருவாரூர் மாவட்டத்தில் 12,900 ஹெக்டேரும், நாகை மாவட்டத்தில் 13,000 ஹெக்டேரும் என ஏறத்தாழ 42,900 ஹெக்டேரில் மட்டுமே சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.

இந்நிலையில், தென்மேற்குப் பருவ மழையும் எதிர்பார்த்த அளவுக்குப் பெய்யவில்லை. மேட்டூர் அணை நீர்மட்டமும் குறைந்து வருவதால், அணை திறப்பும் தள்ளிப் போகிறது. ஆகஸ்ட் மாதமும் தண்ணீர் திறக்க வாய்ப்பில்லை எனக் கூறப்படுகிறது. எனவே, தென்மேற்குப் பருவ மழையைவிட, இப்போது வடகிழக்குப் பருவ மழையை எதிர்நோக்கத் தொடங்கியுள்ளனர் டெல்டா விவசாயிகள்.

இதனால், நிகழாண்டு முன் பட்ட சம்பா பயிர் சாகுபடிக்கும் வாய்ப்பில்லை. வழக்கமாக ஒரு போக சம்பா சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள், ஆகஸ்ட் மாதத்தில் நாற்று விட்டு, செப்டம்பர் மாதத்தில் நடவுப் பணிகளை முடித்துவிடுவர்.

வடகிழக்குப் பருவ மழை நவம்பர், டிசம்பர் மாதங்களில் உச்சகட்டத்தை எட்டும்போது, வளர்ச்சி நிலையை பயிர் அடைந்துவிடும். எனவே, புயல், வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டாலும் பயிர் சேதம் ஓரளவுக்குத் தவிர்க்கப்படும்.

2010 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய ஆண்டுகளில் மேட்டூர் அணை திறப்பதில் தாமதம் நிலவினாலும், ஜூலை இறுதி அல்லது ஆகஸ்ட் மாதத்தில் தண்ணீர் திறந்துவிடப்பட்டதால், விவசாயிகளுக்கு முன் பட்ட சம்பா சாகுபடி சாதகமாக அமைந்தது.

இப்போது டெல்டா மாவட்டங்களில் ஒரு போக சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் சாகுபடி பணிகளைத் தொடங்குவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர். எனவே, முன் பட்ட சம்பாவுக்கு வாய்ப்பில்லாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், சம்பா சாகுபடியே தள்ளிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.


அதற்கேற்ப வேளாண்மைத் துறையிலும் நீண்டகால விதை நெல் ரகங்களுக்குப் பதிலாக, மத்திய கால ரகங்களைப் பரிந்துரை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. என்றாலும், விவசாயிகள் மத்தியில் தயக்கம் நிலவுகிறது.

இதுகுறித்து முன்னோடி விவசாயி ராயமுண்டான்பட்டி வெ. ஜீவகுமார் தெரிவித்தது:

கடந்த காலங்களில் வடகிழக்குப் பருவமழை பெய்து அல்லது பெய்யாமல் கெடுக்கும். மேலும், பின்பட்ட சாகுபடிக்கு டிசம்பர் மாதத்துக்குப் பிறகு தண்ணீருக்கு உத்தரவாதம் கிடையாது. எனவே, பயிர்கள் வறட்சிக்கு உள்ளாகும் என்ற அச்சம் விவசாயிகளிடையே நிலவுகிறது என்றார் அவர்.

## வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை: தமிழகத்தில் மழை வாய்ப்பு

First Published : 06 Aug 2012 03:28:37 AM IST



சென்னை, ஆக. 5: வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியிருப்பதால் தமிழகத்தின் சில பகுதிகளில் திங்கள்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒடிசா மற்றும் ஆந்திர மாநிலங்களுக்கு இடையே வடமேற்கு வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக ஆந்திரத்தை ஒட்டியுள்ள தமிழக பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை பொய்த்துவிட்டதாக கருதிய நிலையில், ஆகஸ்ட் மாதம் தொடங்கியதில் இருந்து பருவமழை சற்று தீவிரமடைந்துள்ளது. உத்தரகண்ட் உள்ளிட்ட வட மாநிலங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இந் நிலையில் வங்கக்கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகியிருப்பதால் ஆந்திரத்திலும் தமிழகத்தின் வட பகுதிகளிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

வானிலை முன்னறிவிப்பு: ஒடிசா கடல் பகுதியிலிருந்து ஆந்திரத்தின் தென் பகுதி வரை காற்றழுத்தத் தாழ்வு நிலை பரவியுள்ளது. இதன் காரணமாக ஆந்திரத்தில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. அதோடு தமிழக கடலோரப் பகுதிகளில் சில இடங்களில் திங்கள்கிழமை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

ஆனால் இந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை புயலாக வலுப்பெற்று தீவிரமடைய வாய்ப்பில்லை. தற்போதுள்ளதைவிட வலுவிழக்கவே அதிக வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்குப் பருவமழை சற்று தீவிரமடைந்துள்ளது விவசாயிகளுக்கு ஆறுதல் தந்துள்ளது. அணைப் பகுதிகளில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இருப்பினும் இந்த மழையால் அணையின் நீர்மட்டம் வெகுவாக உயர வாய்ப்பில்லை. தொடர்ந்து பலத்த மழை பெய்தால்தான் அணையின் நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது என்று பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி தமிழகத்தில் பதிவான மழை (சென்டி மீட்டரில்):
செங்கல்பட்டு - 3, திருவாலங்காடு, சேலம் மாவட்டம் தம்மம்பட்டி - 2, உதகை, காஞ்சிபுரம், மகாபலிபுரம், ஸ்ரீபெரும்புதூர், தாம்பரம், பென்னாகரம் - 1.

## விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி

First Published : 05 Aug 2012 12:15:18 PM IST

திண்டுக்கல், ஆக. 4: சிறுதானியப் பயிர்கள் சாகுபடி செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு, வேளாண் ஆராய்ச்சி மையத்தின் மூலம் அட்மா திட்டத்தின்கீழ் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.  பதிவு செய்து கொள்ளும் விவசாயிகள் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட உள்ளதாக, ஒட்டன்சத்திரம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பெ.பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் தற்சமயம் இருக்கும் நீர் ஆதாரத்தினைக் கொண்டு இறவைப் பயிர்களாக மக்காச்சோளம், சோளம் மற்றும் காய்கறிப் பயிர்கள் அதிகளவு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இதனைக் கருத்தில்கொண்டு, புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு அளித்திடும் நோக்கில், தமிழக அரசு பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளது.

இதனடிப்படையில் ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் சிறு தானியப் பயிர்கள் சாகுபடி செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளைத் தெரிவு செய்து, வாகரை வேளாண் ஆராய்ச்சி மையத்தில் பயிற்சி அளிக்க, அட்மா திட்டத்தின்கீழ் பதிவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பயிற்சியில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள், தங்களது பெயரினை வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர், தொழில்நுட்ப வல்லுநர்களிடம் பதிவுசெய்து கொள்ள வேண்டும்.

பதிவுசெய்து கொண்டவர்களில், பதிவுமூப்பின் அடிப்படையில் பயிற்சி பெறுவதற்கான முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

## 1,637 கால்நடைகளுக்கு சிகிச்சை

First Published : 05 Aug 2012 01:59:55 PM IST

பெரம்பலூர், ஆக. 4: பெரம்பலூர அருகே உள்ள திருப்பெயர் கிராமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற முகாமில் 1,673 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

பெரம்பலூர் மாவட்டத்தில் கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில், 2012- 13-ம் ஆண்டுக்கு 56 முகாம்கள் நடத்த முடிவு செய்யப்பட்டு, கடந்த ஜூலை மாதம் முடிய 8 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஆகஸ்ட் மாதத்தில் 11 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், பெரம்பலூர் ஒன்றியம், மேலப்புலியூர் ஊராட்சி திருப்பெயர் கிராமத்தில் நடத்தப்பட்ட கால்நடை மருத்துவ முகாமில் தடுப்பூசி போடுதல், கன்றுகள் மற்றும் ஆடுகளுக்கு குடல்புழு நீக்கம், நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை, சினை ஆய்வு, சினை பிடிக்காத பசு மற்றும் எருமை மாடுகளுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டது.

முகாமில் பங்கேற்ற 1,637 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட கலப்பினக் கிடாரி கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு, பரிசு வழங்கப்பட்டது.

பெரம்பலூர் கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் தங்கராசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## எஸ்.புதூர் அருகே உழவர் பயிற்சி முகாம்

First Published : 05 Aug 2012 11:46:01 AM IST

சிங்கம்புணரி,ஆக. 4: சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் அருகே உள்ள மேலவண்ணாயிருப்பு கிராமத்தில் விதைக் கிராம திட்ட உழவர் பயிற்சி முகாம் நடைபெற்றது.

விதைக் கிராம திட்டம் 2012-2013ம் ஆண்டிற்கான உழவர் பயிற்சி முகாமிற்கு வேளாண்மை இணை இயக்குநர் செல்லத்துரை தலைமை தாங்கினார். வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணன் வரவேற்று பேசினார்.

விழாவில் ஒன்றியக்குழுத் தலைவர் ராஜமாணிக்கம் முன்னிலை வகித்து விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடுகளை வழங்கினார். மேலும் முகாமில் தரமான விதை உற்பத்தி தொழில்நுட்பம் மத்திய மாநில அரசின் திட்டங்கள் மற்றும் புதிய துவரை நாற்று தொழில்நுட்பம் குறித்து விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

முகாமில் ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன், துணை வேளாண்மை இயக்குநர் பொன்காத்தபெருமாள், ஊராட்சி துணைத் தலைவர் கோமதி, வேளாண்மை அலுவலர் செல்லத்துரை, துணை வேளாண்மை அலுவலர் தவமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் ராமசாமி, ராஜவேலன், வெங்கடேசன், செந்தில்குமார் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## விதை பரிசோதனை நிலையத்தில் ஆய்வு

First Published : 05 Aug 2012 01:02:23 PM IST

திருச்சி, ஆக. 4 : திருச்சி அரசு விதைப் பரிசோதனை நிலையத்தில் மத்திய விதைப் பரிசோதனை நிலைய இயக்குநர் பி. மாசிலாமணி அண்மையில் ஆய்வு செய்தார்.

உத்திரபிரதேச மாநிலம், வாரணாசியில் உள்ள மத்திய தலைமை விதைப் பரிசோதனை நிலைய இயக்குநரான பி. மாசிலாமணி, திருச்சியில் உள்ள அரசு விதைப் பரிசோதனை நிலையத்தைப் பார்வையிட்டு, உள்கட்டமைப்பு வசதிகள் குறித்து ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் கூறியது: மத்திய, மாநில விதைப் பரிசோதனை நிலையங்களின் பகுப்பாய்வு முடிவுகள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.

பகுப்பாய்வு முடிவுகளில் இவற்றுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளின் அளவு குறைக்கப்பட வேண்டும். இங்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் விரைவில் செய்துதரப்படும் என்றார்.

விதைச் சான்று அலுவலர்களுக்கு மத்திய விதைப் பரிசோதனை நிலையத்தில் பயிற்சிகள் அளிக்கப்படும் என்றார்.

திருச்சி நிலைய அலுவலர் கி. எழிலரசு, இதன் செயல்பாடுகள் குறித்து விளக்கினார்.

நிலையத்தின் வேளாண் அலுவலர்கள் இரா. ஆனந்தசெல்வி, து. மனோன்மணி ஆகியோர் உடனிருந்தனர்.

## காய்கனிச் செடிகள் வளர்ப்புத் திட்டம் தொடக்கம்

First Published : 05 Aug 2012 02:43:25 PM IST

குடியாத்தம், ஆக. 4: குடியாத்தம் சூரியோதயா தொடக்கப் பள்ளியில் காய்கனிச் செடிகள் வளர்ப்புத் திட்டம் சனிக்கிழமை தொடங்கப்பட்டது.

பள்ளித் தாளாளர் ஃபிலிப்பக்தபிரசன்னா தலைமை வகித்தார். இல்லந்தோறும் காய்கனிச் செடி அமைப்பாளர் டி. ராஜேந்திரன் மாணவர்களுக்கு செடிகளை வழங்கினார்(படம்).

உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் மைக்கேல்தாஸ் செடிகளை நட்டு திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

பள்ளித் தலைமையாசிரியர் ஜெனீஃபர்பிலிப், ஆசிரியர்கள் விக்டோரியா, எம். சுந்தரமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## பருத்தி பயிரிடப்படும் பரப்பு 10-15 சதவீதம் சரிவடையும்



புதுடில்லி: வரும் 2012-13ம் பருவத்தில் (அக்.,-செப்.,), பருத்தி பயிரிடப்படும் பரப்பளவு, 10-15 சதவீதம் குறையும் என எதிர்பார்க்கப்படுவதாக, வேளாண் துறை உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.நடப்பு 2011-12ம் பருவத்தில், 122 லட்சம் ஹெக்டேரில், பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. இதையடுத்து, இதன் உற்பத்தி, 3.47 கோடி பொதிகளாக (1 பொதி-170 கிலோ) இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது, குறைவான மழை, விலை குறைவு ஆகிய காரணங்களால், பருத்தி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும், இதன் உற்பத்தி பாதிக்கப்படாது என தெரிகிறது.உள்நாட்டு விலையுடன் ஒப்பிடும் போது, சர்வதேச அளவில், பருத்தி விலை, 4-5 சதவீதம் குறைவாக உள்ளது. இதன் காரணமாக, இந்திய ஜவுளி துறையினர், நடப்பு பருவத்தில், 12 லட்சம் பருத்தி பொதிகளை இறக்குமதி செய்வதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர்.

## புயலில் பாதித்த முந்திரி மரங்களை அகற்றிவிட்டு ஒட்டுரக செடிகளை நடுவதற்கு அரசு மானிய உதவி

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2012,04:01 IST

வானூர் : தானே புயலில் பாதிக்கப்பட்ட முந்திரி மரங்கள் மற்றும் பழைய தோப்புகளை வெட்டிவிட்டு, ஒட்டுரக செடிகளை நடுவதற்கு விவசாயிகள் தயாராக வேண்டும் என தோட்டக்கலை துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.இது குறித்து தோட்டக்கலை மாவட்ட துணை இயக்குனர் ராசு மற்றும் வானூர் உதவி இயக்குனர் அன்பழகன் வெளியிட்டுள்ள

செய்திக்குறிப்பு: வானூர் பகுதியில் தானே புயலால் சாய்ந்த முந்திரி மரங்களை விவசாயிகள் வெட்டி அகற்றி வருகின்றனர். கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி தலைவர், உதவி வேளாண்மை அலுவலர்கள் அடங்கிய குழுவினர் வெட்டப்பட்ட முந்திரி மரங்கள் குறித்து கணக்கெடுப்பு பணி கடந்த ஜூலை 30ம் தேதி முதல் நடத்தி வருகின்றன. சாய்ந்த முந்திரி மரத்தை வெட்டி எடுக்காத விவசாயிகள் விரைவாக அகற்றி, வேரை தோண்டி அப்புறப்படுத்திட வேண்டும். பின்னர் உழவு செய்து முந்திரி வி.ஆர்.ஐ-3 ஒட்டுச் செடிகள் புதியதாக நடவு செய்வதற்கு ஏற்ற வகையில் நிலத்தை தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

தற்போது உள்ள முந்திரி தோப்புகள் 15 முதல் 20 ஆண்டுகளுக்கு மேல் ஆவதால் அவற்றின் காய்ப்பு திறன் குறைவாக உள்ளது. இந்த செடிகள் ஒட்டுக் கன்றுகள் மூலம் உருவாக்கப் பட்டவை கிடையாது. இதனால் நிலத்தின் மீது படர்ந்துள்ள முந்திரி மரங்களை அவ்வப்போது வெட் டாத காரணத்தால் பூ, பிஞ் சுகள் உற்பத்தி குறைந்து காணப்படுகிறது. தானே புயலுக்கு பிறகு இத்தகைய முந்திரி தோப்புகளில் இருந்து கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10 முதல் 20 சதவீதம் மட்டுமே மகசூல் கிடைத்ததாக தெரிய வருகிறது.பழைய முந்திரி மரங்களை வெட்டிவிட்டு, அரசு வழங்கும் மானியத்தை பெற்று புதிய முந்திரி மரங்களை வளர்க்க விவசாயிகள் முன்வர வேண்டும். அரசு மானியம் முந்திரி மரங்களை வெட்டி அகற்ற எக்டேருக்கு 25 ஆயிரம் ரூபாய், உழவு செய்ய ஆயிரம் ரூபாய், முந்திரி நடவு செய்ய 15 ஆயிரம் ரூபாய், சமுதாய குழாய் கிணறு அமைக்க அரசு மானியம் 50 சதவீதம், நபார்டு வங்கி கடன் உதவி 25 சதவீதம், விவசாயிகள் பங்குத் தொகை 25 சதவீதம் அரசு சார்பில் வழங்கப்படுகிறது.

சொட்டுநீர் பாசனம் அமைக்க சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

## கடம்பூர் வேளாண் வங்கிக்கு ரூ.2 லட்சத்தில் மதிற்சுவர்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2012,03:50 IST

ரிஷிவந்தியம் : சங்கராபுரம் வட்டம் கடம்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு பாதுகாப்பு கருதி 2 லட்சம் ரூபாய் செலவில் மதிற்சுவர் கட்டும் பணி நடந்து வருகிறது. சங்கராபுரம் அடுத்த கடம்பூரில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க வங்கி உள்ளது. இந்த வங்கியை ”ற்றி பல ஆண்டுகளாக மதிற்சுவர் இல்லாமல் பாதுகாப்பற்ற நிலையில் இருந்து வந்தது. இதனை தொடர்ந்து மாநில மான்ய நிதி திட்டத்தின் கீழ் மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்து 2 லட்சம் ரூபாய் செலவில் வங்கிக்கு ”ற்றுப்புற மதிற்சுவர் கட்டும் பணி நடந்து வருகிறது.

## மரவள்ளி பயிரிடுவதில் மேட்டூர் விவசாயிகள் ஆர்வம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2012,02:50 IST

ரிஷிவந்தியம் : பகண்டை கூட் ரோடு அடுத்த மேட்டூர் கிராம விவசாயிகள் மரவள்ளி பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.ரிஷிவந்தியம் பகண்டை கூட் ரோடு அடுத்த மேட்டூர் கிராமத்தில் அதிக அள வில் மரவள்ளி பயிர் செய்யப்பட்டுள்ளது. விளைந்த மரவள்ளி கிழங்குகளை தருமபுரி, ஆத்தூர் பகுதியில் சேமியா, மாட்டு தீவனங்கள் தயாரிக்கும் மாவு பேக்டரிக்காக நேரிடையாக வந்து விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படுகிறது. சாகுபடி செலவும் மற்ற பயிர்களைவிட குறைவாக உள்ளது. தண்ணீர் மட்டுமே இருந்தால் போதுமானது, அதிக ஆட்களும் தேவையில்லை. மூன்று முறை மட்டும் உரம் போட்டால் போதுமானது. ஏக்கருக்கு 25 மூட்டைகள் வரை கிழக்கு கிடைக்கிறது, ஒரு கிலோ 6 ரூபாயில் இருந்து 9 வரை விலை கிடைக் கிறது.சந்தையில் கொண்டு விற்கும் வேலை மிச்சமாவதுடன், அதிக லாபம், பராமரிப்பு செலவு குறைவு போன்ற காரணங்களால் மேட்டூர் கிராம விவசாயிகள் மரவள்ளி பயிர் செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## மஞ்சள் விலை ஏறுமுகத்தால் விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2012,05:18 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 1,600 மூட்டை மஞ்சள், 65 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. மஞ்சள் விலை உயர்வால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில், சனிக்கிழமை தோறும், மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.ஏலத்துக்கு, திருவண்ணாமலை, கடலூர், பெரம்பலூர், நைனார்பாளையம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், ஆத்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், தங்கள் விளைவித்த மஞ்சள் மூட்டைகளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 5,100 ரூபாய்க்கும், அதிகபட்சம், 8,079 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 4,000 ரூபாய்க்கும், அதிகபட்சம், 7,169 ரூபாய்க்கும், பனங்காலி மஞ்சள் குவிண்டால், குறைந்தபட்சம், 9,000 ரூபாய்க்கும், அதிகபட்சம், 12 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.
ஏலத்தில், 1,600 மூட்டை மஞ்சள், 65 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 180 ரூபாய், உருண்டை மஞ்சள், 300 ரூபாய் விலை உயர்ந்துள்ளது.

மஞ்சள் ஏலத்தில், விலை ஏறுமுகத்தை நோக்கிச் செல்வதால், மஞ்சள் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### பந்தல் காய்கறி உற்பத்திக்கு மானியம் விவசாயிகள் பயன்பெற அழைப்பு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2012,05:38 IST

தாராபுரம்: தாராபுரம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகள், பந்தல் காய்கறிகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானியம் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளதாக, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் தமிழ்செல்வன் கூறினார்.
உதவி இயக்குனர் தமிழ்செல்வன் அறிக்கையில் கூறியதாவது:
தாராபுரம் மற்றும் குண்டடம் ஆகிய யூனியனுக்கு உட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் முழுக்க முழுக்க விவசாயத்தையே சார்ந்துள்ளனர். அமராவதி ஆற்றின் மூலம் பழைய, புது ஆயக்கட்டு பாசன கால்வாய் மூலம் விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர்.
தற்போது தண்ணீர் பற்றாக்குறை அதிகளவு இருப்பதால் பந்தல் காய்கறிகளை பயிர் செய்தால், விவசாயிகள் கூடுதல் லாபம் பெறலாம். காய்கறி விவசாயத்தை ஊக்குவிக்க தமிழக அரசு, 50 சதவீதம் மானியம் வழங்குகிறது. கொடி வகை காய்கறிகளான அவரை, பாகை, பீர்க்கன், சுரை, கோவக்காய், புடலை, அவரை உட்பட பல்வேறு காய்கறிகளை பயர் செய்யலாம். பந்தல் காய்கறிகளை பயிர் செய்ய கல், சிமெண்ட் தூண்களுக்கு ஒரு ஏக்கருக்கு, ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. வீரிய மற்றும் உயர் விளைச்சல் தரும் காய்கறி ரக விதைகளுக்கு, 50 சதவீத மானியத்தொகை, அதிக பட்சமாக ஒரு ஹெக்டேருக்கு, 5 ஆயிரத்து, 600 ரூபாய் வழங்கப்படுகிறது. கூடுதல் தகவல் அறிய தாராபுரம், குண்டடம் வட்டார அரசு தோட்டக்கலைத்துறை அலுவலரை தொடர்ப்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### வரத்து அதிகரிப்பால் விலை குறைவு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2012,00:31 IST

திண்டுக்கல்: திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில் தக்காளி உட்பட அனைத்து காய்கறிகள் வரத்து அதிகரித்துள்ளது. கத்திரிக்காய் கிலோ 20 ரூபாய்க்கு விற்றது. தக்காளி கிலோ 5 லிருந்து 8 ரூபாய்க்கும் மற்ற அனைத்து காய்கறிகளும் கிலோ 20 ரூபாய்க்கும் குறைவான விலையில் விற்கப்பட்டன.காய்கறி வியாபாரி சந்தோஷ் கூறுகையில்,"வெயில் காலத்தில் தக்காளி விளைச்சல் அதிகமாக இருக்கும். மழை காலத்தில் காய்கறி பயிர்களை முழுமையாக அறுவடை

செய்ய முடியாது. தண்ணீரில் மூழ்கி அழுகி விடும். தற்போது மழை இல்லாததால் காய்கறிகளின் வரத்தும் அதிகமாக உள்ளது. காய்கறிகளை பொறுத்தவரை சிறிதளவு தண்ணீர் பாய்ச்சினால் போதும். விளைச்சல் அமோகமாக இருக்கும். கத்திரிக்காயை தவிர அனைத்து காய்கறிகளும் மிக குறைந்த விலையில் விற்கப்பட்டு வருகின்றன' என்றார்.

**விவசாயிகளுக்கு இயற்கை உரமாகும் வெள்ளைப்பூண்டு கழிவுகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2012,00:39 IST

பெரியகுளம்:இலவசமாக கிடைக்கும் வெள்ளைப்பூண்டு கழிவுகளை, இயற்கை உரமாக பயன்படுத்தி, விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். பெரியகுளம் அருகே வடுகபட்டி, தாமரைக்குளம் பகுதிகளில் வெள்ளைப்பூண்டு கழிவுகளை இயற்கை உரமாக அதிகளவில் விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். உடனடி விளைச்சலுக்காக ரசாயன உரங்களை அதிகளவில் பயன்படுத்தி, மண் வளத்தை குறைக்கின்றனர். தொடர்ந்து ரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்ட நிலத்தில் ஐந்தாண்டுகளுக்கு பின் விளைச்சல் பாதிக்கிறது. அதன் பிறகு மண்பரிசோதனை செய்து மண்ணின் வளத்தை அதிகரிக்க சிரமப்படுகின்றனர்.

சிறிதளவாவது இயற்கைக்கு மாறும் விவசாயிகள், மண்ணை உழுது, இயற்கை உரங்களான மாட்டுச் சாணம், புண்ணாக்கு கரைசல், கீரைச்செடிகளை போட்டு பயிர் செய்கின்றனர். இலவசமாக கிடைக்கும் இயற்கை உரமான வெள்ளைப்பூண்டு கழிவுகளை பயன்படுத்தி, அதிகளவு விளைச்சல் பெறுகின்றனர். வெள்ளைப்பூண்டு கழிவுகளை சேகரித்து, நிலத்தில் கொட்டி உழவு செய்யும் போது, மண்ணில் தீங்கு விளைவிக்கும், வேர்புழுக்கள் இறக்கின்றன. மண்ணின் வளமும் அதிகரிக்கிறது. இதனால் வாழை, கரும்பு, தென்னை உட்பட பல்வேறு வகையான பயிர்களும் விளைச்சல் அதிகரிக்கிறது.

ஹோமியோ சிகிச்சை பிரிவு செயல்பட நடவடிக்கை தேவை

தேவாரம்:தேவாரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், உள்ள ஹோமியோபதி சிகிச்சை பிரிவு வாரநாட்கள் அனைத்திலும் செயல்பட நடவடிக்கை தேவை.

மாவட்டத்தில், தேவாரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பெரியகுளம் அரசு ஆஸ்பத்திரியில் ஹோமியோபதி சிகிச்சை பிரிவு செயல்படுகிறது.

பெரியகுளத்தில் டாக்டர் நியமிக்கவில்லை. தேவாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்கள் மட்டும் சிகிச்சையளிக்கப்படுகிறது.

ஹோமியோபதி சிகிச்சைக்கு மாவட்டத்தின் பிற பகுதியிலிருந்தும், இடுக்கி மாவட்டத்தில் உள்ள தோட்ட தொழிலாளர்களும் வருகின்றனர்.

நூறுக்கும் அதிகமான புறநோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது. பக்க விளைவுகளில்லாததால், ஹோமியோபதி சிகிச்சைக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

வாரத்தின் அனைத்து நாட்களும், ஹோமியோபதி பிரிவு செயல்பட மாவட்ட சுகாதாரத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## உர விற்பனையை கண்காணிக்க கட்டுப்பாட்டு அறைகள்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2012,00:00 IST

ராமநாதபுரம்:உர விற்பனையை கண்காணிக்க வட்டார, மாட்ட அளவில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன, என வேளாண் இணை இயக்குனர் சக்தி மோகன் தெரிவித்தார்.
அவர் கூறியதாவது: ராமநாதபுரம் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் நெற்பயிர்களின் பரப்பினை கணக்கில் கொண்டு 2012-13ம் ஆண்டிற்கு யூரியா 26 ஆயிரத்து 700 மெட்ரிக் டன், டிஏபி 10 ஆயிரத்து 600 மெ.டன், பொட்டாஷ் 4 ஆயிரத்து 700 மெ.டன் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் 11ஆயிரத்து 180 மெ.டன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திலுள்ள 131 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் 141 தனியார் உர விற்பனையாளர்கள் மூலமாக இருப்பு வைத்து விநியோகம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. தனியார் உரக்கடைகளில் விற்பனை செய்யப்படும் உரங்கள் விவசாயிகளுக்கு அதிகபட்ச விலையை காட்டிலும் கூடுதலாக விற்கப்படுகிறதா என ஆய்வு செய்வதற்காக உர ஆய்வாளர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இம்மாதம் முதல் உற விற்பனையை கண்காணிக்க வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் கட்டுப்பாட்டுஅறைகள் அமைக்கப்பட்டுள்ளன", என்றார்.

## கீழக்கரையில் பசுமையின் அளவு குறித்து ஆய்வு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2012,00:07 IST

கீழக்கரை:கீழக்கரையில் கர்னாடகா வனத்துறை அலுவலர்கள் பசுமையின் அளவு குறித்து நவீன கருவிகள் மூலம் ஆய்வு மேற்கொண்டனர்.மாவட்டத்தில் பசுமை நிறைந்த தோப்புகள் அழிக்கப்பட்டு பிளாட்டுகளாக்கி விற்பனை செய்யப்படுகிறது. மரங்கள் வளர்ப்பது குறித்து மக்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வந்தும் ஆர்வம் இல்லாததால் பசுமையின் அளவு குறைந்து வருகிறது.கீழக்கரையில் கர்னாடகா வனத்துறை அலுவலர்கள் பசுமையின் அளவை நவீன கருவிகள் உதவியுடன் மரங்களில் உள்ள காற்றின் ஈரப்பதம், ஆக்ஸிஜன் உள்ளிட்ட பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டனர். கீழக்கரை வனச்சரக அலுவலர் ஜெயராமன் கூறியதாவது:வனத்துறையில் உள்ள ஆய்வு துறையினர் ஆண்டுதோறும் ஆய்வு மேற்கொள்வது வழக்கம். நடப்பாண்டில் மாவட்டத்தில் எட்டு இடங்களில் ஆய்வு பணி மேற்கொண்டுள்ளனர், என்றார்.

## காளான் வளர்ப்பு தொழில்முறை வேளாண்மை உருவாக்க பயிற்சி திட்டம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2012,00:40 IST

வல்லநாடு : வல்லநாடு அருகில் உள்ள கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மத்திய அரசின் உயிர் தொழில் நுட்பத்துறை நிதியுதவியுடன் காளான் வளர்ப்பு மூலம் வேளாண் தொழில் முனைவோர்களை உருவாக்கும் பயிற்சித்திட்டம் துவக்க விழா நடந்தது. விழாவில் முதன்மை திட்ட ஆராய்ச்சியாளர் பேராசிரியர் எபனேசர் வரவேற்றார். பயிர் பாதுகாப்புத்துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முருகேசன் மற்றும் திருநெல்வேலி மாவட்ட தேசிய வேளாண் மை மற்றும் ஊரக வளர்ச்சி பாங்கின் உதவி பொது மேலாளர் ராமலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிப்பிக் காளான் வளர்ப்பில் தனது வெற்றி அனுபவங்களை சங்கரன்கோவில் காளான் வளர்ப்பாளர் ராஜவிநாயகம் பயிற்சி பெறுவோர்களுடன் பகிர்ந்து கொண்டார். கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரியின் முதல்வர் கணேசன் விழாவிற்கு தலைமைவகித்து பேசினார். அவர் தனது உரையில் சிப்பிக் காளான் வளர்ப்புக்கு தற்போது ஏற்பட்டுள்ள முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறினார்.

இத்திட்டத்திற்காக நிதியுதவியாக சுமார் ரூ.20 லட்சம் இந்திய உயிர் தொழில்நுட்பத்துறை அளித்திருப்பதாகவும், இரண்டு இளநிலை ஆராய்ச்சியாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார். திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் காளான் வளர்ப்பில் ஆர்வமுடையவர்களைத் தெரிவு செய்து சிப்பிக்காளான் வளர்ப்பு, சிப்பிக்காளான் விதை உற்பத்தி, சிப்பிக்காளான் சேமிப்பு மற்றும் பதப்படுத்துதல் பற்றி சிறப்பு பயிற்சிகள் தொடர்ச்சியாக அளிக்கப்படும் எனவும் கூறினார்.

சிப்பிக் காளான் வளர்ப்பு பயிற்சிக்குப் பின் தொடர் நடவடிக்கையாகப் பல்வேறு இடங்களில் மாதிரி காளான் வளர்ப்பு பண்ணைகள் அமைத்து அங்கேயே தொடர் பயிற்சிகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் கூறினார். பயிர் நோயியல் துறை பேராசிரியர் ஜெயசேகர் நன்றி கூறினார். நிகழ்ச்சியினைத் தொடர்ந்து காளான் வளர்ப்பு குறித்த பல்வேறு தலைப்புகளின் கீழ் தொழில்நுட்ப பயிற்சிகள் நடத்தப்பட்டது.

பயிற்சியில் பேராசிரியர் கண்ணன் காளான் வளர்ப்பு முறைகள், வளர்ப்பில் ஏற்படக்கூடிய பிரச்னைகள் மற்றும் அதன் தீர்வுகளும் குறித்து தெளிவாக எடுத்து கூறினார். இளநிலை ஆராய்ச்சியாளர் டெல்பின்மேரி காளான் படுக்கை தயாரித்தல், காளான் வித்து தயாரித்தல் குறித்து செயல்விளக்கப் பயிற்சி அளித்தார்.

தினகரன்

# நீர்மட்டம் மேலும் குறைந்ததால் பவானிசாகர் அணை மூடப்பட்டது: நெற்பயிர்கள் கருகும் அபாயம்

பதிவு செய்த நேரம்:2012-08-06 09:49:21

கோபி, : நீர்மட்டம் 30 அடியாக குறைந்ததையடுத்து. பவானிசாகர் அணை நேற்று காலை மூடப்பட்டது.

பவானிசாகர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் தண்ணீர் இருப்பு குறைவாகவே இருந்து வந்தது. இந்த நிலையில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் பாசனத்துக்கு தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டதை அடுத்து சில வாரமாக அணையின் நீர்மட்டம் 40 அடிக்கும் கீழேயே இருந்து வந்தது.

கடந்த வாரம் நீர்மட்டம் 35 அடியாக குறைந்த நிலையில் தடப்பள்ளி, அரச்கன்கோட்டை, காலிங்கராயன் பாசனத்துக்கு தண்ணீர் நிறுத்தப்பட்டது. இதற்கிடையில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை முதல்போக பாசனத்திற்கு உயிர்த்தண்ணீர் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து நீலகிரி மாவட்டம் நீர்மின் அணைகளில் இருந்து 1.3 டிஎம்சி தண்ணீர் கடந்த வாரம் பவானிசாகர் அணைக்கு வழங்கப்பட்டது. இதனால் அணையின் நீர்மட்டம் 34 அடியில் இருந்து 37 அடியாக உயர்ந்தது. இதற்கிடையே தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு வழங்கிய தண்ணீரை 800 கனஅடியில் இருந்து 650 கனஅடியாகக் குறைத்தனர்.

அதே நேரத்தில் காலிங்கராயன் வாய்க்காலில் திறந்து விடப்பட்ட தண்ணீர் அளவு 400 கனஅடியில் இருந்து 650 கனஅடியாக உயர்த்தப்பட்டது. இதனால் நேற்று காலை வரை அணையில் இருந்து 1300 கனஅடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்று காலை நீர்மட்டம் 30 அடியாகவும் தண்ணீரின் கொள்ளளவு 1.1 டிஎம்சியாகவும் குறைந்தது. இதனைத் தொடர்ந்து நேற்று காலை 9 மணிக்கு பவானிசாகர் அணை மூடப்பட்டது. அப்போது அணைக்கு வினாடிக்கு 111 கனஅடி தண்ணீர் மட்டுமே வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து தண்ணீர் நிறுத்தப்பட்டு விட்டதால் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப்பகுதியில் சுமார் 24,750 ஏக்கரில் கதிர் பிடிக்கும் பருவத்தில் இருக்கும் நெற்பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

## வேளாண்மை திட்டப்பணிகளை ஆராய்ச்சிக் குழுவினர் ஆய்வு

பதிவு செய்த நேரம்:2012-08-06 09:48:45

கோபி, : கோபி பகுதியில் வேளாண்மைத் திட்டங்களை மதிப்பீட்டுக் குழுவினர் ஆய்வு செய்தனர். மாநில திட்டக்குழுவின் கீழ் இயங்கி வரும் மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சித்துறை அலுவலர்கள், துணை இயக்குநர் அழகுபாண்டியன் தலைமையில் கோபி பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் தென்னை வளர்ச்சி வாரியத் திட்டங்களை ஆய்வு செய்தனர். கோபியில் உள்ள தென்னை ஒட்டுண்ணி உற்பத்தி நிலையத்தை ஆய்வு செய்த குழுவினர், அங்கு பிரக்கானிட் வகை ஒட்டுண்ணி உற்பத்தி செய்யும் முறைகள், கருந்தலைப் புழுக்களைக் கட்டுப்படுத்தும் விதம், விவசாயிகளுக்கு விநியோகிக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தனர். அதைத் தொடர்ந்து பாரியூர் வெள்ளாளபாளையம் அருகே குளவி கரடு பகுதியில் உள்ள விவசாயி நாச்சிமுத்து தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த தென்னை செயல் விளக்கத்திடலை குழுவினர் பார்வையிட்டனர். அங்கு விவசாயிகளிடம் தென்னைக்கு இடப்படும் உரம், இடுபொருள், மகசூல் உள்ளிட்ட விபரங்களை கேட்டறிந்தனர்.
இந்த ஆய்வின்போது ஈரோடு துணை வேளாண்மை இயக்குநர் (மத்திய திட்டம்) மாரியப்பன், கோபி வேளாண்மை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி, கூகலூர் வேளாண்மை அலுவ லர் நாகராஜன், உதவி வேளா ண்மை அலுவலர் ராஜா உள்ளி ட்ட பலர் கலந்து கொண்டனர்.
ஒருங்கிணைந்த ஜவுளி வணிக... உத்தரவுபடி மாற்றுப் பாதையை ஆய்வு செய்து அதன்படியே நிறைவேற்ற வேண்டும், சத்தியில் இருந்து மைசூர் செல்லும் மலைப்பாதையில் 27 கொண்டை ஊசி வளைவுகள் உள்ளது. இதனால் அதிக பாரங்கள் ஏற்றிச்செல்லும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகி பலமணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டு வருகிறது. இதற்காக பண்ணாரியில் வாகனங்களை அப்புறப்படுத்த கிரேன் நிறுத்தி வைக்க வேண்டும் என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
இந்நிகழ்ச்சியில், பொதுச்செயலாளர் ராஜமாணிக்கம், பொருளாளர் குமாரசாமி, துணைத் தலைவர்கள் குணசேகரன், நாகராஜ், தனபால், சாயம், கெமிக்கல் விற்பனையாளர்கள் சங்க தலைவர் சின்னுசாமி, மாவட்ட அனைத்து செல்போன் மற்றும் மொபைல் ரீசார்ஜ் விற்பனையாளர்கள் சங்க தலைவர் ராஜேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர். துறையினர் தங்களது செயல் விளக்க திடல்கள் மூலம் நிரூபித்துள்ளனர். இதன் மூலம் ஒரு ஹெக்டேருக்கு 500 கிலோ துவரையை கூடுதலாக மகசூல் செய்ய முடியும் என்பதும் நிருபிக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக துவரை சாகுபடி மூலம் ஒரு ஹெக்டேருக்கு (ஒரு ஹெக்டேர் என்பது இரண்டரை ஏக்கர்) 1500 கிலோ துவரம்பருப்பு மகசூல் கிடைக்கும். புதிய தொழில்நுட்பமான நாற்று நடவுமுறையை பயன்படுத்தும் போது ஒரு ஹெக்டேருக்கு 2000 கிலோ மகசூல் கிடைக்கிறது.

விதைப்பு முறையில் ஒரு ஏக்கருக்கு 4 கிலோ விதை தேவைப்படும். ஆனால் நாற்றுமுறையில் ஒரே ஒரு கிலோ துவரை விதை மட்டுமே போதும்.

ஈரோடு மாவட்டத்தை பொறுத்தவரை இந்த ஆண்டில் 44 இடங்களில் செயல்விளக்க திடல் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் மொத்தம் 570 ஹெக்டேர் பரப்பளவில் கோ (ஆர்ஜி)-7 துவரை சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானியமும் வழங்கப்படுகிறது. இதற்கான நாற்றுக்களை விவசாயிகளுக்கு வேளாண் துறையே நேரடியாக வழங்குகிறது. நாற்று தயாரிப்பதற்கான செயல் விளக்க திடல் அமைக்க உதவும் விவசாயிக்கு ஹெக்டேருக்கு ரூ.15 ஆயிரம் வீதம் மானியம் வழங்கப்படுகிறது. மிக குறைந்தளவிற்கு நீரை பயன்படுத்தும் சொட்டு நீர்பாசனம் மூலம் துவரை சாகுபடியில் ஈடுபடும் விவசாயிக்கு தலா ரூ.7500 வீதம் மானியமும் வழங்கப்படுகிறது. துவரை சாகுபடியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்புதிய தொழில்நுட்பம் மூலமாக துவரம்பருப்பு உற்பத்தி பெருகுவதுடன், இறக்குமதியும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## செவ்வாழை விலை குறைந்தது

பதிவு செய்த நேரம்:2012-08-06 09:48:02

கோபி, : கோபி, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம் தோறும் இருமுறை வாழை ஏலம் நடைபெற்று வருகிறது. நேற்று நடந்த ஏல விற்பனைக்கு 4 ஆயிரம் வாழைத்தார்களை கோபி, நம்பியூர், கூகலூர், புதுக்கரை புதூர், டி.என்.பாளையம், பங்களா புதூர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 60க்கும் மேற்பட்ட விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர்.

கதலி கிலோ 42 ரூபாய்க்கும், நேந்திரன் கிலோ 28 ரூபாய்க்கும் தேன் வாழை தார் ஒன்று ரூ.550, ரொபஸ்தோ ரூ.450, செவ்வாழை ரூ.420, பூவன் ரூ.410, மொந்தன் ரூ.350, பச்சை நாடன் ரூ.317, ரஸ்தாளி ரூ.212 என விலை போனது. மொத்தம் ரூ.6 லட்சத்துக்கு வாழைத்தார்கள் விற்பனை செய்யப்பட்டது. வாழைத்தார்கள் விலை கடந்த வாரத்தை விட விலை அதிகரித்து இருந்தது. கதலி கிலோவுக்கு ரூ.1.50 கூடியிருந்தது. தேன் வாழை தார் ஒன்று ரூ.150 முதல் 180 வரையும் ரொபஸ்தோ ரூ.100 வரையும் விலை அதிகரித்து இருந்தது. ஆனால் கடந்த வாரம் தார் ஒன்று ரூ.650க்கு விற்ற செவ்வாழை, இந்த வாரம் விலை கணிசமாக குறைந்து 420 ரூபாய்க்கே விற்றது குறிப்பிடத்தக்கது.

மேலும் 3 ஆயிரம் தேங்காய்கள் விற்பனைக்கு வந்திருந்தன. ஒரு காய் ரூ.4.50 முதல் 7,60 வரை ரூ.20 ஆயிரத்துக்கு ஏலம் போயிருந்தது.